
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஏப்ரல் 16, 2022 Weekly E-paper ● April 16, 2022



## ஆறிப்போன தேநீர் விருந்து!

## கொதிக்கும் உணர்வுகள்!

சுப.வீரபாண்டியன்

### கருப்பும், சிவப்பும் கைகோக்கும் கண்ணூர் மாநாடு!

தமிழ் பிரபு

### அண்ணாமலை, அண்ணாமலை என்ற ஒருவர்

தலையங்கம்

### பெரியாரின் நாத்திக அரசியல்!

நூல் அறிமுகம்: உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஏப்ரல் 16, 2022 Weekly E-paper ● April 16, 2022


# ஆறிப்போன தேநீர் விருந்து! கொதிக்கும் உணர்வுகள்!

சுப.வீரபாண்டியன்

ஆளுநர் அளித்த தேநீர் விருந்தைத் தமிழக அரசு புறக்கணித்தது மிகப் பெரிய அரசியல் செய்தி! அதனால் தேநீர் செலவு மிச்சம் என்று பேசுவது, மிகக் குறுகிய சிறுபிள்ளைத்தனம்.

இந்நிகழ்வு, ஆளுநர் என்னும் ஒரு தனி மனிதரைப் புறக்கணிப்பதோ, கட்சி அரசியலை வெளிப்படுத்துவதோ இல்லை. ஓர் அரசு, ஆட்சித் தளத்தில் தங்கள் கடும் எதிர்ப்பை அழுத்தமாகப் பதிவு செய்வது! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசின் தீர்மானத்தை அலட்சியப்படுத்துவது, நாட்டு மக்களையே அவமானப்படுத்துவது ஆகும்! நாட்டையும் மக்களையும் அவமதிக்கும் உரிமை எந்தக் கொம்பனுக்கும் இருக்க முடியாது.





திருப்பி அனுப்பப்பட்ட தீர்மானத்தை மீண்டும் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய பிறகு, அதனைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதைத் தவிர, சட்டத்தில் வேறு வழியில்லாத நிலையில், அதனை அனுப்பாமலே வைத்திருப்பது, சட்ட மீறலும் ஆகும்.

இந்த நிலையிலும், மிக நிதானமாக, மிகக் கவனமாகத் தமிழக அரசு நடந்து கொண்டு வருகிறது. இப்போதும் ஆளுநர் சட்டத்தை மதிப்பார் என்ற நம்பிக்கையை முதல்வரின் கடிதம் வெளிப்படுத்துகிறது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவைப் போல எந்த ஒரு தன்முனைப்போடும் இன்றைய முதல்வர் நடந்து கொள்ளவில்லை. அன்றைய நாள்களில் முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்கும், ஆளுநராக இருந்த சென்னா ரெட்டிக்கும் இடையில் நடந்த மோதல்கள் எப்படித் தரம் குறைந்தன என்பதை நாம் அறிவோம்.

ஆளுநர் என்னிடம் தவறாக நடந்து கொண்டார் என்று ஓர் அரசியலற்ற குற்றச்சாற்றை அன்றைய முதல்வர் முன்வைத்தார். (சென்னாரெட்டியால், சரியாகக் கூட நடக்க முடியாது என்பது வேறு செய்தி). பிறகு ஒரு விடுதலை நாள் விழா அணிவகுப்பில், முதல்வரும், ஆளுநரும், ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்க்காமல், வேறு வேறு பக்கம் திரும்பி அமர்ந்திருந்தார்கள்.

அதுபோன்ற எந்த ஒரு செயலிலும் இன்றைய அரசும், முதல்வரும் ஈடுபடவில்லை. மக்களுக்கான கோரிக்கையினை மறுபடியும் மறுபடியும் ஆளுநர் புறக்கணித்தால், ஆளுநரையே திரும்பப்பெற வேண்டும் என்ற கோரிக்கைதான் அடுத்து எழும்.

ஆளுநரைத் திரும்பப் பெறுவது நல்லது. ஆளுநர் பதவியையே எடுத்துவிடுவது அதனை விட நல்லது! ●

## கருஞ்சட்டை விருது வழங்கும் விழா

திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் “கருஞ்சட்டை விருது” வழங்கும் விழா 29-04-2022, வெள்ளி மாலை 6 மணிக்கு, சென்னை, தியாகராயர் நகர், சர்.பிட்டி தியாகராயர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.




தோழர் செல்வின் சவுந்தரராசன் தலைமையில், தோழர் சிற்பி செல்வராசு வரவேற்பில் பேராசிரியர் முனைவர் சுப.வீரபாண்டியன் விழா அறிமுகவுரை ஆற்றுகிறார்.

திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் தோழர் அருள்மொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் மயிலை த.வேலு, ஜெ.கருணாநிதி ஆகியோர் பாராட்டுரை வழங்குகிறார்கள்.

தோழர்கள் கயல் தினகரன், பொள்ளாச்சி மா. உமாபதி, ஆ.சிங்கராயர், ‘பெல்’ராஜன், மகாலட்சுமி, காசு.நாகராசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். நிகழ்ச்சியின் தொகுப்புரை இரா. உமா, நன்றியுரை எட்வின்.

கருஞ்சட்டை விருதுகளைத் தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள் வழங்கி வாழ்த்துகிறார். விருதாளர்களுக்கு ரூபாய் ஒரு லட்சம் காசோலையை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு மா.சுப்பிரமணியன் அவர்கள் வழங்கி வாழ்த்துரை ஆற்றுகிறார்.

திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன், திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொருளாளர் எழில்.இளங்கோவன், திராவிட இயக்கச் செயற்பாட்டாளர் கொளத்தூர் சின்னராசு ஆகிய மூவர் விருது பெறுகின்றனர். வாருங்கள் தோழர்களே, விழாவைச் சிறப்பிப்போம் !

# கருப்பும், சிவப்பும் கைகோக்கும் கண்ணூர் மாநாடு!

**தமிழ் பிரபு**

அக்டோபர் 1917 ரஷ்யப் புரட்சிக்கு பின் உலகம் முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சி கொள்கைகள் பரவத் தொடங்கியது. சரியாக அதே தருணத்தில் தமிழகத்தில் திராவிடப் புரட்சி ஒன்று உருவானது. திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக்கட்சி உருவான ஆண்டு அதுதான். பின்னர் 1926 இல் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி உருவானது. அந்த நேரத்தில் நீதிக்கட்சி மதராஸ் மாகாண ஆளுங்கட்சியாக இருந்தது. மாகாண மக்களின் முன்னேற்றத்திற்காகப் பல முற்போக்குத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி முடித்திருந்தது நீதிக்கட்சி அமைச்சரவை.

இன்று இந்தியாவில் முதுபெரும் இயக்கங்களாக, நூறாண்டு கால இயக்க சித்தாந்தங்களாகப் பொதுவுடைமை மற்றும் திராவிடச் சித்தாந்தங்கள் திகழ்கின்றன. அதேபோல சாமானிய மக்களுக்கான தேவைகளை அறிந்து அதை வெற்றிகரமாக அவர்களுக்கு கொண்டு சேர்ப்பதில் திராவிட இயக்கமும், பொதுவுடைமை இயக்கமும் ஓரணியில் உள்ளன.

கம்யூனிஸ்ட் அறிக்கையை தமிழில் முதலில் வெளியிட்டது திராவிட இயக்கம், வெளியிட்டவர் தந்தை பெரியார். மே 1 தொழிலாளர் தினத்தை அரசு விடுமுறையாக அறிவித்தது திராவிட முன்னேற்றக் கழகம். தோழர்கள் என்று விளிப்பதைக் கூட இரு இயக்கங்களும் ஒன்றாகவே கருதின.

பொதுவுடைமைத் தோழர்கள் நினைப்பதைத் திராவிட இயக்கத் தோழர்கள் செயல்பாட்டில் கொண்டு வந்து விடுகிறார்கள். திராவிட இயக்கத் தோழர்களுக்கு உற்ற துணையாக கம்யூனிஸ்ட் தோழர்கள் இருக்கிறார்கள். இரட்டைத் தண்டவாளங்கள் என்றாலும் பயணமும், சேருமிடமும் ஒன்றுதான்.

சில தருணங்களில் எதிரெதிர் பக்கங்களில் நின்றாலும்கூட, இடதுசாரிகள் என்ற ஒற்றைப் புள்ளியில், கருத்தியல் ரீதியாக, பொதுவுடைமை இயக்கமும், திராவிட இயக்கமும் ஒற்றுமையுடன் செயல்படுகின்றன.

ஃபாசிசம், மதவடிவம் பூண்டு மக்களை வதைத்து, பிரித்தாளும் இந்தச் சூழ்நிலையில் அதை முழுவீச்சில் எதிர்கொள்ள, இடதுசாரி இயக்கங்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டிய நேரமிது. இந்நிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, கேரளாவில் அகில இந்திய மாநாட்டைக் கண்ணூரில் கூட்டி இந்திய ஒன்றியத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளது.

மிகுந்த எழுச்சியோடு நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 23ஆவது மாநாட்டில், ஏப்ரல் 16 அன்று நடைபெற்ற மாநில உரிமைகள் கருத்தரங்கில் கேரள முதல்வர் பினராயி விஜயன் அவர்களோடு, தமிழகத்தின் பிரதிநிதியாகத் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் பங்கேற்றார்.



அப்போது பெரியார் வைக்கம் சென்றது, கம்யூனிஸ்ட் அறிக்கையைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டது குறித்துப் பேசியதோடு திராவிட மற்றும் கம்யூனிஸ்ட் உறவு என்பது 80 ஆண்டுகள் வரலாறு கொண்டது என்பதை எடுத்துரைத்தார்.

இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமானால் முதலில் மாநிலங்கள் காப்பாற்றப்பட வேண்டும். தென்மாநிலங்களின் குழு ஒன்றை உருவாக்கி மாநிலங்களை ஒருங்கிணைத்துப் போராட வேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமைதான் நமது பண்பாடு. ஆனால், இந்த வேற்றுமையை அழித்து ஒற்றைத் தன்மையை உருவாக்கச் சிலர் நினைக்கிறார்கள். ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே கல்வி, ஒரே பண்பாடு, ஒரே கலாச்சாரம் என்று உருவாக்க நினைக்கிறார்கள். பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மாநில உரிமையை மீட்டெடுக்க ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று விளக்கிப் பேசினார் தி.மு.கழகத் தலைவர் ஸ்டாலின்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களின் பேச்சென்பது ஆதிக்கபுரிக்கு அபாயச் சங்கு ஊதுவது போல இருந்தது. ஒன்றிய அரசு வீழ்வதற்கான தேவையை உணர்த்தியது. துண்டு துண்டாக சிதறிகிடக்கும் எதிர்கட்சிகளுக்கு ஒன்று கூடுவதற்கான சமிக்ஞையைக் காட்டியது.

இந்த சூழ்நிலையில் மீதமுள்ள மாநில உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுக்கவும், பறிபோக உள்ள உரிமைகளைப் பாதுகாக்கவும், பறிபோன கல்வி, பொருளாதாரம் உள்ளிட்ட உரிமைகளை மீட்டெடுக்கவும், எதிர்வரும் 2024 தேர்தலை எதிர்கொள்ளவும் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினும், கேரள முதல்வர் பினராய் விஜயனும் இந்த மாநாட்டில் கரம் உயர்த்தி உள்ளார்கள்.

கருப்பையும், சிவப்பையும் இணைகிறது, காவியின் நிறத்தைத் கலைக்கிறது - கண்ணூர் மாநாடு !



வானம்உன் கொடியின் நிறம் - தன்
மானம்உன் கொள்கைத் திறம்
நீதிஉன் எழுத்தின் ஒளி- சமூக
நீதிஉன் வாழ்வின் நெறி
பிறந்தாயே தீயைப் போல் - நீ
இறந்தாலும் எங்கள் வாள்!

–சுப.வீரபாண்டியன்

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## அண்ணாமலை, அண்ணாமலை என்ற ஒருவர்

அண்ணாமலை, அண்ணாமலை என்ற ஒருவர், பாரத ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவராக இருந்து வருகிறார்.

ஐ.பி.எஸ் படித்ததாகச் சொல்லும் இவர் அரசியல் பண்ணத் தெரியாத ஒரு 'பஃபூன்' என்றே தோன்றுகிறது.

அண்மையில் சட்ட மன்றத்தில், திராவிட இயக்கங்கள்தான் தமிழ் நாட்டை ஆள முடியும் என்று செங்கோட்டையன் பேசினார்.

பதறிப் போன அண்ணாமலை, 'திராவிட இயக்கம் என்பதற்கு விளக்கம் தேவை' என்றார். அடுத்த வார்த்தை 'நானும் திராவிடன்தான்' என்றார். திராவிடர்கள்தான் தமிழகத்தை ஆள முடியும் என்று சொல்லிக் கொண்டே, தி.மு.க, அ.தி.மு.கவில் இருப்பவர்கள் எங்கள் உறவினர்கள் என்று முடித்துக் கொள்கிறார். அண்ணாமலையின் இந்தப் பேச்சு குழப்பமாக அல்லவா இருக்கிறது.

இந்தியாவின் அலுவல் மொழியாக இந்திதான் வரும் என்று பா.ஜ.க வின் அமித்ஷா சொல்கிறார். இதற்குத் தமிழகம் ஆப்படித்து வைத்திருக்கிறது என்பது வேறுவிசயம்.

ஆனால் அண்ணாமலை என்ன சொல்கிறார்? இந்தித் திணிப்பை பா.ஜ.க ஏற்காதாம். அப்படி இந்தியைத் திணிக்க முயற்சித்தால் தமிழக பா.ஜ.க எதிர்க்குமாம்! யாரை எதிர்க்கும்? சொல்லவில்லை அவர்.

ஆனாலும் விடவில்லை அவர். தமிழ் இந்தியாவின் இணைப்பு மொழியாவதற்கான "குவாலிட்டி" ( தரம்) அதற்கு இருந்தாலும், "குவாண்டிட்டி" (பேசுவோர் எண்ணிக்கை) குறைவு என்று அசரீரி வாக்கு அளித்துக் கொண்டு இருக்கிறார்.

தமிழகத்தில் பா.ஜ.கவை வளர்த்தெடுக்கப் போகிறாரோ என்று பார்த்தால், அவர் ரேசன் கடைக்குள் நுழைந்து மோடியின் படத்தை மாட்டிவிட்டுக் கட்சியை வளர்ப்பது மக்களை 'ஆச்சரியப்பட' அல்லவா வைக்கிறது.

இப்பொழுது என்ன சொல்கிறார் அண்ணாமலையார்?

தமிழக ஆளுநர் கொடுக்கும் தேனீர் விருந்தைத் தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் புறக்கணிப்பதால், கவர்னருக்கு காசு லாபம் -என்கிறார் இந்தக் கணக்குப் பிள்ளை?

ஏன் புறக்கணிப்பு என்பது கூடத் தெரியாத ஞானசூனியமா இவர் என்று நாம் கேட்கவில்லை.

கமலாலயத்திற்கும் பொழுதுபோக வேண்டும் அல்லவா?

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## சென்னை - காஞ்சி மாவட்டங்களின் கலந்தாய்வு

சென்னை,காஞ்சி மாவட்டங்கள் இணைந்து மாவட்ட மாநாடு நடத்துவது தொடர்பாக 10-5- 2022 அன்று இரு மாவட்டங்களின் கலந்தாய்வுக் கூட்டம் காஞ்சி மாவட்டச் செயலாளர் தோழர் இளமாறன் தலைமையில், சென்னை மாவட்டத் தலைவர் தோழர் கார்த்திக் முன்னிலையில் நடந்தது. கூட்டத்திற்கு மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆசிங்கராயர், தலைமை நிலையச் செயலாளர் தோழர் எட்வின் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.

1) சென்னை, காஞ்சி மாவட்டங்கள் இணைந்து "மாநில சுயாட்சி மாநாடு" நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

2) மாநாடு முழுநாள் மாநாடாக நடத்துவது என்றும், இம்மாநாட்டில் "மாநில சுயாட்சி மலர்" வெளியிடுவது என்றும், இவை குறித்த செயல்பாடுகளுக்கு விரைவில் இரு மாவட்டத் தலைமையும் கூடி முடிவெடுக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இணைய வழியில் நடந்த இக் கூட்ட இறுதியில், சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் ஜெய்சூர் நன்றி கூறினார்.

## திருப்பூர் மாவட்டக் கலந்தாய்வு !



திருப்பூர் மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாவட்ட கலந்தாய்வுக் கூட்டம் 12-04-2022 அன்று மாநிலத் துணை பொதுச்செயலாளர் தோழர் சிற்பி செல்வராஜ் தலைமையில் பல்லடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் இளங்கோவன், நிதிக்குழு ஆலோசகர் தோழர் மணிகண்டன், மாவட்டத் தலைவர் தோழர் பா.நாககுமார், மாவட்டச் செயலாளர் தோழர் பிரகாஷ், மாவட்டப் பொருளாளர் தோழர் தென்றல் சேகர், மாநகரச் செயலாளர் தோழர் முருகானந்தம், மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் விஜய், தோழர்கள் திலீப், சூர்யா, ரிஷி கேஷவன், பெருமாள்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கலந்தாய்வு கூட்டத்தில் கீழ்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன..

1) பேரவை நாளுக்குத் திரட்டப்படும் நிதி 25-04-2022 தேதிக்குள் நிதி அளித்தவர்களின் பெயர்களுடன் தலைமைக்கு அனுப்பி வைக்கப்படும்.


2) வருகிற ஜூன் 15ஆம் தேதிக்குள் திருப்பூர் மாவட்டத்தில் பேரவையின் கொடியேற்றல், பெயர் பலகை திறப்பு நிகழ்ச்சிகள் நடத்துவது என்றும், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மேற்கு மண்டல மாநாடு திருப்பூர் மாவட்டத்தில் நடத்திடவும் தீர்மானிக்கப்பட்டன.

# பெரியாரின் நாத்திக அரசியல்!

நூல் அறிமுகம்

**உதயகுமார்**

“Periyar - A STUDY IN POLITICAL ATHEISM” என்னும் நூலை இலக்கிய/பண்பாட்டுக் கருத்தியல் வரிசையில், ஓரியன்ட் பிளாக் ஸ்வான் பதிப்பகம் அண்மையில் வெளியிட்டிருக்கிறது. வால்வர்ஹாம்ப்டன் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கார்த்திக் இராம் மனோகரன் என்னும் ஆய்வாளர் பெரியாரின் நாத்திக அரசியல் பற்றிய இந்த ஆய்வு நூலை எழுதியிருக்கிறார்.




ஒரு புதிய ஆய்வுப் பார்வையில், தந்தை பெரியாரின் நாத்திகம் எப்படி அரசியல் கருத்தியலாகவும், இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் உலகம் முழுமைக்கும் தேவையான கருத்தியலாகவும் இருக்கிறது என்பதை இந்நூலில் நூலாசிரியர் தெளிவாக விளக்கியிருக்கிறார். இந்நூல் ஆய்வுலகில் பெரும் கவனத்தைப் பெற்றிருக்கிறது.

தந்தை பெரியாரை ஒரு முழுமையான பகுத்தறிவாளர் என்றும், தத்துவங்களுக்கு எதிரானவர்(anti-philosopher) என்றும் முதல் அத்தியாயத்தில் அறிமுகப்படுத்தி, பெரியார் எப்படி உலக தத்துவச் சிந்தனையாளர்களிடமிருந்து தனித்து மாறுபட்டு இருக்கிறார் என்பதை முன்வைக்கிறார்.

‘தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்’ என்றும் ‘தமிழ்நாட்டின் ரூசோ’ என்றும் இங்கே பெரியாரின் மீதான ஒப்பீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்நூலாசிரியர் இந்த ஒப்பீடுகள் மீதான கேள்வியை எழுப்புகிறார். பெரியாருக்கும் மற்ற தத்துவச் சிந்தனையாளர்களுக்கும் சில ஒற்றுமைகள் இருந்த போதிலும், பெரியார் எப்படி முற்போக்கான கருத்துகளை முன்வைத்து தனித்து விளங்குகிறார் என்பதை எடுத்துக்காட்டுகிறார். சாக்ரடீஸ், பெரியார் இருவருமே கவிஞர்களையும் புலவர்களையும் கடுமையாக விமர்சித்தார்கள். ஆனால் சாக்ரடீஸ் புலவர்களை விமர்சித்தது கடவுளைத் தவறான முறையில் சித்தரித்ததற்காக. ஆனால் பெரியார் புலவர்களை விமர்சித்தது கடவுளைப் புகழ்ந்து பாடி மக்களைச் சிந்திக்க விடாமல் மூடர்களாக வைத்திருந்ததற்காக. தந்தை பெரியாரின் ‘பகுத்தறிவு’ சாக்ரடீஸின் ‘ஆன்மீகத் தத்துவங்களில்’ இருந்து வேறுபடுவதை இங்கே நூலாசிரியர் சுட்டிக் காண்பிக்கிறார். பாதிரியார்களையும், தேவாலயங்களையும் விமர்சித்த ரூசோ மக்களுக்கு மதம் வேண்டுமென்று நம்பினார். அதேபோல் வால்டர், எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சக்தி இருப்பதாக நம்பினார். எனவே தந்தை பெரியாரைத் தமிழ் நாட்டின் ரூசோ என்றோ வால்டேர் என்றோ ஒப்பிட முடியுமா என்கிற கேள்வியை எழுப்புகிறார்.

தந்தை பெரியாரின் பார்ப்பனிய எதிர்ப்பு என்பது அனைத்தையும் கேள்விக்கு உட்படுத்துகிற, விமர்சனத்திற்கு உட்படுத்துகிற, தெளிவை ஏற்படுத்துகிற, பார்ப்பனிய அரசியலை அகற்றுகிற - நாத்திக அரசியல் என்பதை இந்த நூலின் முதன்மையான கருத்தாக முன்வைக்கிறார்.

இரண்டாம் அத்தியாயத்தில் அரசியல் நாத்திகம் பற்றி விரிவாக எடுத்துச் சொல்கிறார். இதில் மார்க்சியத் தத்துவங்களோடும், அனார்க்கிஸம்(anarchism) எனும் அரசின்மைக் கொள்கையான மிக்கேல் பக்குனின் (Mikhail Bakunin) தத்துவங்களோடும் தந்தை பெரியாரின் எழுத்துகளை ஒப்பிட்டு, பெரியாரியம் என்பது மார்க்சியம் அனார்க்கிஸம் இரண்டுக்கும் இடையிலான, இரண்டும் அல்லாத ஒரு தத்துவமாக இருப்பதை விளக்குகிறார்.

பெரியார் சோவியத் ரஷ்யா சென்று வந்ததையும், மார்க்சியச் சிந்தனைகளைத் தமிழில் வெளியிட்டதையும் முன்வைத்து, பெரியாரின் கம்யூனிச ஆதரவையும் எடுத்துரைக்கும் அதே நேரத்தில், அவர் எப்படி “அதிகாரம்” என்பது எந்த மட்டத்திலும் இருப்பதை எதிர்த்தார் என்கின்ற கருத்தையும் முன்வைக்கிறார். இதன்மூலம் தந்தை பெரியாரின் கருத்துகள் கிட்டத்தட்ட அனார்க்கிஸத்திற்கு அருகில் இருக்கின்றன என்பதை இங்கே விவரிக்கிறார். மார்க்சியப் பெரியாரிய அறிஞர்கள் எஸ். வி.ராஜதுரை, வ.கீதா போன்றவர்கள் தந்தை பெரியாரின் கொள்கை என்பது மார்க்சியமே என்று பல்வேறு ஆய்வு நூல்களை எழுதியதைச் சுட்டிக்காட்டி, ஆனால் தந்தை பெரியாரின் கொள்கை என்பது மார்க்சியத்தை விடவும் அனார்க்கிஸத்திற்குத்தான் மிகவும் நெருக்கமாக இருக்கிறது என்கிற தன்னுடைய வாதத்தை முன்வைக்கிறார் நூலாசிரியர்.

இரண்டு மதங்களைப் பெரியார் ஆதரித்ததையும், இஸ்லாமிய மதமாற்றத்திற்கு வலுவாகக் குரல் கொடுத்ததையும் முன்வைக்கும் நூலாசிரியர் அவற்றை ஒரே வரியில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“We must realize that these are moments in Periyars’s thoughts and not the essence of Periyars’s thoughts” (இவை பெரியாரின் சிந்தனைகளின் சில கணங்களே தவிர சாரம் அல்ல)

அதேபோல் செக்யூலரிஸம் (மதச்சார்பின்மை) விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டு, போஸ்ட்-செக்யூலரிஸம் என்ற கருத்தியல் இன்று முன்வைக்கப்பட்டு, மத அடையாளங்களை அரசியலில் முன்னெடுப்பவர்களிடமிருந்து மட்டும் பெரியார் வேறுபட்டு நிற்கவில்லை. புதிய நாத்திகர்களாக (New Atheists) மதங்களை மட்டும் தாக்கும் வேளையில் நாட்டையும் அரசையும் விமர்சிக்காத நாத்திகத்திலிருந்தும், பெரியாரின் நாத்திக அரசியல் வேறுபட்டு நிற்கிறது என்பதை நூலாசிரியர் நிறுவுகிறார்.

தமிழ்நாடு நாத்திக நாடாக மாறவில்லை. ஆனால் கடவுள் நம்பிக்கையும் மதமும் மக்கள் மனங்களில் இருக்கிறதேயன்றி, அவர்களின் அரசியல் அடையாளமாக இல்லை. அதுவே பெரியாரின் நாத்திக அரசியல் என்பதைக் கூர்மையாகச் சொல்கிறார். பெரியாரின் இந்த நாத்திக அரசியலே, மானுட விடுதலையின் அடிப்படையிலான, சமூக நீதிக்கான சமத்துவ உலகிற்கான கருத்தியலாக, நூலாசிரியர் இவ் ஆய்வின் மூலம் முன்வைக்கிறார்.

பெரியாரின் சிந்தனைகள் புத்துலகைப் படைத்துக்கொண்டே இருக்கும்!

## பேரவையின் நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

*அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான 14-04-2022 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் நீட் தேர்வை எதிர்த்துத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக எதிர்ப்பு முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் தலைமையில், ஆர்ப்பாட்ட அறிமுக உரையைச் சட்டமன்ற உறுப்பினர் எழிலரசன், கண்டன உரையைச் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜா, தாயகம்கவி, ஆகியோர் ஆற்றினர். தொடர்ந்து தோழர்கள் பொள்ளாச்சி உமாபதி, ஆ.சிங்கராயர், மு.மாறன், காசு.நாகராசன், இரா.உமா உள்ளிட்டோர் கண்டன உரை ஆற்றினார்கள்.*



*ஆர்ப்பாட்டத்தில் “பெல்” ராஜன், லாரன்ஸ், முத்தையா குமரன், கார்த்திக், ஜெய்சூர், இளமாறன், அன்பு, தாம்பரம் இளங்கோ, உதயகுமார், வெற்றிச்செல்வன் உள்ளிட்ட தோழர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.*

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian